Australian Government
The Treasury

# இதர மொழிகள் – இந்த வலைத்தலத்தினை உங்களுடைய மொழியில் விளங்கிக்கொள்வதில் உங்களுக்கு உதவி தேவையா?

ஆஸ்திரேலியாவில் செய்யப்படும் வெளி நாட்டு முதலீடுகளை விளங்கிக்கொள்வதில் உதவுவதற்காக ஆங்கிலம் அல்லாத மற்ற மொழிகளில் உள்ள தகவல்கள் எம்மிடம் உள்ளன.

## மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு உதவி

உங்களுடைய மொழியில் இந்தத் தகவல்களை உங்களால் காண இயலவில்லை என்றால், உங்களுக்குத் தேவைப்படும் சேவையுடன் தொடர்புகொள்ள பின் வரும் இணைப்புகள் உங்களுக்கு உதவக்கூடும்.

**‘மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை’ (‘டிஸ் நேஷனல்’) (Translating and Interpreting Service (TIS) National)**

ஒரு நாளில்நாளுக்கு 24 மணி நேரமும், வாரத்தில்ம் 7 நாட்களும் ‘உள் நாட்டு விவகாரத் திணைக்கள’த்தின். (DHA) ‘’டிஸ் நேஷனல்’ சேவை தொலைபேசி மூலமாக மொழிபெயர்த்துரைப்பாளர்களை வழங்குகிறது. 13 14 50- எனும் இலக்கத்தில், உள்ளூர் அழைப்பிற்கான கட்டணத்தில் இந்த சேவையை நீங்கள் ஆஸ்திரேலியாவில் எங்கிருந்தும் அணுகலாம்.

**National Accreditation Authority for Translators and Interpreters (NAATI)**

NAATI -யினால் சான்றளிக்கப்பட்டுள்ள அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் அல்லது மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரைக் கண்டறிய, நீங்கள்:

- அவர்களுடைய இணையவழி விவரத்திரட்டைப் பார்க்கலாம்
- 1300 557 470 எனும் இலக்கத்தில் NAATI-யை அழைக்கலாம் (ஆஸ்திரேலியாவில் மட்டும்).

**‘மஞ்சள் பக்கங்கள்’ (Yellow pages)**

“மொழிபெயர்த்துரைப்பாளர்கள்” அல்லது “மொழிபெயர்ப்பாளர்கள்” என்பதில் தேடலை மேற்கொள்வதன் மூலம் ‘மஞ்சள் பக்கங்க’ளில் நீங்கள் மொழிபெயர்த்துரைப்பாளர்கள் அல்லது மொழிபெயர்ப்பாளர்களைக் கண்டறியலாம்.

**‘சர்வீசஸ் ஆஸ்திரேலியா’ (Services Australia) – இதர மொழிகளிலுள்ள தகவல்கள்**

தனது இணையவழி வெளியீடுகளில் பலவற்றிற்குமான மொழிபெயர்ப்புகளை ‘சர்வீசஸ் ஆஸ்திரேலியா’ அளிக்கிறது, இவற்றில் பின் வரும் தகவல்களும் உள்ளடங்கும்:

- ஆஸ்திரேலியாவிற்கும் மற்றும் பல்வேறுபட்ட நாடுகளுக்கும் இடையேயான சமூகப் பாதுகாப்பு ஒப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்ட
- சமீபத்தில் புலம் பெயர்ந்தவர்கள்
- பகுதி நேர மற்றும் 'கேஷுவல்' தொழிலாளர்கள் ஆகியோருக்கான
- உதவித்தொகைக் கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளைப் பற்றிய தகவல்கள்.

**'சர்வீசஸ் ஆஸ்திரேலியா' மொழிபெயர்த்துரைப்பு மற்றும் மொழிபெயர்ப்பு சேவைகள்**

உதவித்தொகைக் கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளுக்கான அந்தரங்கமான வேண்டுகோள் ஒன்றைச் செய்ய உங்களுக்கு உதவுவதற்காக 'சர்வீசஸ் ஆஸ்திரேலியா' இலவச மொழிபெயர்த்துரைப்பு மற்றும் மொழிபெயர்ப்பு சேவைகளை அளிக்கிறது.

**'உள் நாட்டு விவகாரத் திணைக்களம்' (Department of Home Affairs (DHA))**

புதிதாய்ப் புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் விசா வேண்டுபவர்களுக்கான அறிவுரைகளுடன் கூடிய மொழிபெயர்க்கப்பட்ட மூலவளங்களின் அட்டவணை ஒன்று DHA-இடம் உள்ளது.

**'ஆஸ்திரேலிய வரியிறுப்பு அலுவலகம்' (Australian Taxation Office (ATO)) –இதர மொழிகளிலுள்ள தகவல்கள்**

ஆஸ்திரேலியாவில் வரி விதிக்கப்படும் முறையைப் பற்றி விளங்கிக்கொள்ள உங்களுக்கு உதவுவதற்கான இணையவழி வெளியீடுகளை ATO அளிக்கிறது. அரபு, அசிரியன்,ஆஸ்லன், பர்மியம், சீனம், க்ரோவேஷியம், தாரி, டிங்க்கா, ஸ்பானியம், ஃபார்சி, கிரேக்கம், ஹிந்த , இந்தோனேசியம், இத்தாலியம், ஜப்பானியம், கரேன், க்மேர், மாசிடோனியம், ரஷ்யம், செர்பியம், சொமாலி, த்தாய், துருக்கியம் மற்றும் வியட்நாமியம் ஆகிய மொழிகளில் வடிவுருக்கள் கிடைக்கும்.